DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

அமர்வு வழக்கு எண். 229/2021

அ.சா.– 14

பெயர் : திரு. டாக்டர் கோகுலரமணன்	கிராமம்: சேலம்
த/பெ. : திரு. கந்தசாமி	தாலூக்கா : சேலம்
வயது : 54	தொழில்: அரசு மருத்துவர்

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 44 of 1969, this the 08th day of September, 2026.

2 முதல் 4 எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்குரைஞர் ஆஜர்)

முதல்விசாரணை:–

நான் தற்போது சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.09.2019 அன்று நான் அதே துறையில் பணியிலிருந்தபோது மல்லூர் காவல்நிலைய ஆய்வாளர் அவர்களிடமிருந்து குற்ற எண். 139/2019 என்ற வழக்கில் சம்மந்தப்பட்ட 19 வயது நிறைந்த திலிப்குமார் என்கிற ஆண் பிரேதத்தை சடலக்கூறாய்வு செய்ய கொடுத்த வேண்டுகோள் கடிதத்திற்கு இணங்க பிரேதத்தை தலைமைக்காவலர் கோவிந்தராஜ் அடையாளம் காட்ட அன்றைய தினமே காலை 11.50 மணிக்கு சடலக்கூறாய்வை ஆரம்பித்தேன். பிரேதத்தில் மரண விறைப்பு தன்மை உடல்முழுவதும் காணப்பட்டது.

வெளிப்புறகூறாய்வு – கீழ்க்கண்ட இறப்பிற்கு முன் ஏற்பட்ட வெளிப்புற காயங்கள் காணப்பட்டது.

Velaras R
Digitally signed by Velaras R
Date: 2026.09.08 17:08:48 +0530

I Additional District Judge,
Salem

1. ஒரு நேர்குத்திலான வெட்டுக்காயம் வலப்பக்க முட்டியின் மேல்புறம் 5செ.மீ x 2 செ.மீ x எலும்பு ஆழம் வரையில்

2. ஒரு கிடைமடை நிலையான வெட்டுக்காயம் வலப்பக்க முட்டியின் கீழ்ப்புறமாக 5செ.மீ x 1 செ.மீ x எலும்பு ஆழம் வரையில்

3. ஒரு வளைந்த வெட்டுக்காயம் இடதுபக்க முதுகின் மத்திய பகுதியில் 3.5செ.மீ x 1.5செ.மீ x உட்புற ஆழம் வரையில், இந்த காயத்தின் உட்புற முனை மத்திய நேர்கோட்டிலிருந்து 11 செ,மீ இடதுபுறமாகவும், இடதுபக்க தோள்பட்டை எலும்பிலிருந்து 6 செ.மீ கீழ்புறமாகவும் காணப்பட்டது.

4. நான் முன்பு கூறிய காயம் 3 லிருந்து 13 செ.மீ கீழ்ப்புறமாக ஒரு குத்துகாயம் 1.5செ.மீ x 0.5 செ.மீ x தசை ஆழம் வரையில் காணப்பட்ட இந்த காயத்தின் உட்புறமுனையிலிருந்து ஆயுதம் வெளியேறிய கீறின காயம் காணப்பட்டது.

5. ஒரு கருமையான சிவந்த கீறின சிறாய்ப்பு காயம் இடதுபக்க கை புஜத்தில் 5 x 0.5 செ.மீ அளவில்

6. ஒரு கருமையான சிவந்த கீறின சிறாய்ப்பு காயம் இடதுபக்க மார்பு பகுதியில் 4 x 0.5 செ.மீ அளவில்

7. ஒரு கருமையான சிவந்த கீறின சிறாய்ப்பு காயம் வலது பக்க வயிற்று பகுதியில் 3 x 0.2 செ.மீ அளவில்

8. இடது பக்க பெருவிரல் மற்றும் ஆள்காட்டிவிரல் இணையும் இடத்தில் ஒரு வெட்டுக்காயம் 3 செ.மீ x 2 செ.மீ x எலும்பு ஆழம் வரையில்

உட்புறக்கூறாய்வு – தலை பகுதியை கூறாய்பு செய்து பார்த்ததில் தலையின் மேல் தோள், கபாலம், கபாலத்தின் அடிப்பகுதி ஆ கியன இயல்பான நிலையில் காணப்பட்டன. மூளை வீக்கத்துடன் வெளிறி காணப்பட்டது.

Velaras R
Digitally signed by Velaras R
Date: 2026.09.08 17:08:54 +0530

I Additional District Judge,
Salem

கழுத்து பகுதியை கூறாய்வு செய்து பார்த்ததில் கழுத்தின் உள்ளுறுப்புகள் குரல்வளை எலும்பு உட்பட இயல்பான நிலையில் காணப்பட்டன.

மார்பு பகுதியை கூறாய்வு செய்து பார்த்ததில் இடதுபக்க 7வது மார்பு கூட்டு எலும்பின் கீழ் வெளிப்புற காயம் மூன்றுடன் இணைந்த குத்துக்காயம் காணப்பட்டது.

மற்ற கூட்டு எலும்புகள் இயல்பான நிலையில் காணப்பட்டன.

இருதயம் இயல்பான அளவில் அதன் அறைகள் காலியாக இருந்தன.

இடது நுரையீரலின் கீழ்ப்பகுதியில் வெளிப்புற காயம் மூன்றுடன் இணைந்த ஒரு வெட்டுக்காயம் 3 செ.மீ x 1 செ.மீ x 2 செ.மீ அளவில் காணப்பட்டது.

இரண்டு பக்க நுரையீரல்களும் வெளிறி காணப்பட்டன. வயிற்றுப்பகுதியை கூறாய்வு செய்து பார்த்ததில் இரைப்பை 25 மில்லி பழுத்த திரவம் எந்தவித குறிப்பிட்ட வாடையின்றி காணப்பட்டது. கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகங்கள் இயல்பான அளவில் வெளிறி காணப்பட்டன. சிறுநீரகப்பை காலியாக இருந்தது.. இடும்பு எலும்பு, முதுகு தண்டுவடம் இயல்பான நிலையில் காணப்பட்டன. உடல் உள்ளுறுப்புகளை சேகரம் செய்து பதப்படுத்தி ரசாயன பகுப்பாய்விற்காக அனுப்பி வைக்கப்பட்டது. ரசாயன பகுப்பாய்வு அறிக்கை வேண்டி இறப்பின் காரணத்திற்கான கருத்து நிலுவையில் வைக்கப்பட்டது. இறப்பிற்கான காலம் சடலக்கூறாய்விலிருந்து மேற்சொன்ன இறந்த நபர் 12 மணிநேரத்திலிருந்து 24 மணி நேரத்திற்குட்பட்ட காலத்தில் இறந்திருக்கலாம் என்று கருத்து தெரிவித்து சான்று தெரிவித்தேன். என்னிடம் காட்டப்படும் பிரேத பரிசோதனை அறிக்கை என்னால் வழங்கப்பட்டது தான். மேற்படி பிரேத பரிசோதனை அறிக்கை **அ.த.சா.ஆ–10** ஆகும். ரசாயன பகுப்பாய்வு அறிக்கை பெற்றபின் இறப்பின் காரணத்திற்கான இறுதி கருத்துரையாக மேற்சொன்ன இறந்த நபர் அவருக்கு ஏற்பட்ட பல குத்துக்காயங்கள் மற்றும் வெட்டுக்காயங்களின் விளைவாக ஏற்பட்ட அதிர்ச்சியினாலும், ரத்த

Velaras R
Digitally signed by Velaras R
Date: 2026.09.08 17:09:00 +0530

I Additional District Judge,
Salem

வெளியேற்றத்தினாலும் இறப்பு நேர்ந்திருக்கலாம் என்று எனது இறுதி கருத்துரை வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்னால் வழங்கப்பட்ட இறுதி கருத்துரு ஆகும். அது **அ.த.சா.ஆ–11** ஆகும். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்குவிசாரணை(எதிரிகள் தரப்பில்):–

இல்லை.

Velaras R
Digitally signed by Velaras R
Date: 2026.09.08 17:09:05 +0530

I Additional District Judge,
Salem